# ஒன்றிய ஆட்சி மக்கள் தேர்ந்தெடுத்த ஆட்சியா? தேர்தல் ஆணையம் தேர்ந்தெடுத்த ஆட்சியா?

## முஸ்லிம் லீக் அரசியல் எழுச்சி மாநாட்டில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

நெல்லை, செப். 17 –

செப்டம்பர் 14 ஆம் தேதி, ஞாயிற்றுகிழமை, திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம் ஜின்னா திடலில், திருநெல்வேலி மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் நடைபெற்ற அரசியல் எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள். அதனைத் தொடர்ந்து, அப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு பூங்காவை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

முஸ்லிம் லீக் அரசியல் எழுச்சி மாநாட்டில் அவர் உரையாற்றுகையில், ”இந்த மேடையிலே நிற்பதற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேடையிலே நிற்பதற்கும் எனக்கு எந்த வித்தியாசமும் கிடையாது என்னுடைய மேடையிலே நிற்கிறேன் என்ற பெருமிதத்தோடு இங்கே நிற்கிறேன்.

ஏனென்றால் திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கும் இருக்கக்கூடிய உறவு என்பது அப்படிப்பட்ட ஒன்று. தமிழ் மொழியை சொல்லுவோம் தொன்மையும் தொடர்ச்சியும் இருக்கக் கூடிய ஒரு மொழி என்று. அதேபோல தொன்மையும் தொடர்ச்சியும் இருக்கக்கூடிய உறவு நம்முடைய உறவு.

இங்கே பேசியவர்கள் எல்லாம் நம்முடைய மரியாதைக்குரிய அன்பிற்குரிய போற்றுதலுக்குரிய காயிதே மில்லத் அவர்களை பற்றி பேசினார்கள்.

ஒரு மிகப்பெரிய பாடத்தை அவர் அன்றே இன்று இருக்கக்கூடிய பிஜேபிக்கு சொல்லிவிட்டு சென்றிருக்கிறார். அதை புரிந்து கொண்டாலே அவர்கள் நேர் வழியிலே நடக்க முடியும். அன்றே சொன்னார் எங்களுடைய வழி இஸ்லாம், ஆனால் எங்களுடைய நாடு இந்தியா என்று.

நான் அல்லாஹ் என்று சொல்லுவதற்கு முன்னால் அம்மா என்று சொன்னவன், என்னுடைய தாய்மொழி தமிழ் மொழி என்று சொன்ன பெருமைமிக்க தலைமகன் அவர்.

இப்படி மொழிக்காக இந்த மண்ணிற்காக அவர்கள் கொண்டாடக் கூடிய தலைவர்கள் எல்லாம் மன்னிப்பு கடிதம் கொடுத்துவிட்டு சிறையில் இருந்து வந்த பொழுது நம்முடைய இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடியவர்களில் முக்கியமாக நின்றவர்கள் இஸ்லாமியர்கள்.

இன்று யாரை அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்களோ தன்னுடைய சிந்தனையின் கருவூலமாக நினைக்கிறார்களோ அவர்கள் எல்லாம், பிரிட்டிஷாரிடம் மன்னித்து விடுங்கள் என்று வேண்டிக் கொண்டு வெளியே வந்தவர்கள்தான்.

### எந்தச் சம்பந்தமும் கிடையாது!

இன்றைக்கு ஆட்சியில் இருக்கக்கூடிய பி.ஜே.பி.க்கும் இந்த நாட்டின் விடுதலைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. இப்படிப்பட்ட வரலாறு வைத்திருக்கக் கூடியவர்கள்தான் நம்மை பார்த்து தேசவிரோதிகள் என்கிறார்கள். ஆனால் விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் எத்தனை பேர் என்றால் யாரும் இல்லை.

இப்படிப்பட்டவர்கள்தான் நம்மை அர்பன் நக்சல் என்று சொல்கிறார்கள். நாட்டுக்கு விரோதமாக பேசுகிறாய் என்கிறார்கள். எனக்குத் தெரியும், நான் நாட்டுக்கு விரோதமாக பேசவில்லை. உங்களுடைய அரசியலை எதிர்த்துப் பேசுகிறேன்.

ஒவ்வொரு முறையும் பிஜேபி இங்கே இருக்கும் தலைவர்களை எதிர்த்துப் பேசும்போது, எங்கள் மீது காழ்ப்புணர்ச்சியைக் கொட்டும்போது அது எங்கள் கழுத்தில் விழக் கூடிய மாலையாக மாறுகிறது.

ஏனென்றால் நாங்கள் எங்கள் கடமையை சரியாக செய்துகொண்டிருக்கிறோம். இந்த நாட்டின் இறையாண்மையை காப்பதற்காக போராடிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் செல்லக் கூடிய பாதை, மார்க்கம் சரியானது என்பதை நிரூபிக்கக்கூடிய ஒன்றுதான் அது.

தொடர்ந்து எத்தனையோ தரவுகள், டேட்டா, உலகத்தின் பல்வேறு நிறுவனங்களின் தரவுகளை வைத்துப் பார்க்கும்போது, . ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு ஒரு இனத்தை எதிர்த்து சிறுபான்மை இனத்தை எதிர்த்து அதிகமாக இங்கே அரசியல் தலைவர்கள், பிஜேபி, ஆர்,எஸ்.எஸ் சை சேர்ந்த தலைவர்கள் அவர்கள் மீது வெறுப்புப் பேச்சை கொட்டுவதில் முதலிடத்தில் இருப்பது நம் நாடுதான் என்று சுட்டிக் காட்டுகிறார்கள். இதற்குக் காரணம் ஒன்றிய அரசு அதிகாரத்தில் அமர்ந்துள்ள பிஜேபி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே அவர்கள் இஸ்லாமிய மக்களை எதிர்த்துக் கொட்டிக் கொண்டிருந்த காழ்ப்புணர்வு, ஆட்சி பீடத்தில் ஏறிய நாள் முதல் கொண்டுவரும் மசோதாக்கள் மாநில உரிமைகளைப் பறிக்கும் மசோதாக்கள் அல்லது சிறுபான்மையினருக்கு எதிரான குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு எதிரான மசோதாக்களாகவே இருக்கிறது. இதை நாடு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

### மறுபடியும் கூட்டணி வைத்து விட்டார் எடப்பாடி!

சி.ஏ.ஏ. கொண்டுவந்தார்கள். சிறுபான்மை மக்களின் சகோதரன் நான் தான் என்று நடுவிலே கொஞ்ச நாள் சொல்லிவந்தார் எடப்பாடி. சி.ஏ.ஏ. கொண்டுவந்த போது எதிர்க்கவில்லை. அந்த சகோதரத்துவம் எங்கே போனது? அந்த நட்பு எங்கே போனது என தெரியவில்லை. இதோ மறுபடியும் கூட்டணி வைத்துவிட்டார்.

சிஏஏவை எதிர்த்தவர்கள் இந்த மேடையில் இருக்கக் கூடிய தலைவர்கள், எதிர்த்தவர்கள் நாம், நம்முடைய கூட்டணியில் இருப்பவர்கள். சிஏஏ கொண்டுவரும்போது இது வெளிநாட்டவருக்கான விவகாரம், இந்த நாட்டிலே இருக்கும் இஸ்லாமியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று சொன்னார்கள்.

இன்று கண்கூடாக பார்க்கிறோம், எந்த அளவுக்கு இங்கே இருக்கிற இஸ்லாமியர்களை எப்படி பாதிப்புக்கு உள்ளாக்குகிறது என்று.

அதைத் தாண்டி ஏதோ இருக்கக் கூடிய சகோதரிகள் மீது அக்கறை இருப்பது போல முத்தலாக் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

நான் அந்த சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் பேசும்போது, முன்னாள் அமைச்சர் ஒருவர் என்னிடம், ‘உங்களுக்கு பெண்கள் மீது அக்கறை இல்லையா?’ என்று கேட்டார்.

நான் கேட்டேன்.. ‘எனக்கு எல்லா பெண்கள் மீதும் அக்கறை இருக்கிறது. உங்களுக்கு ஏன் இஸ்லாமிய பெண்கள் மீது மட்டும் இவ்வளவு திடீர் அக்கறை வருகிறது? என கேட்டேன்.



நமது ராஜ்யசபா வழக்கறிஞர் மிகப்பெரிய வழக்கறிஞர் வந்திருக்கிறார். வேறு எந்த மதத்திலாவது ஒரு கணவன் தனது குடும்பத்தை விட்டுவிடுகிறான் என்கிற போது அவனை ஒருவருடம் சிறைக்கு அனுப்பும் சட்டம் இருக்கிறதா? அப்படி ஒரு சட்டம் இல்லை. ஆனால் அது ஏன் இஸ்லாமியர்களுக்கு மட்டும் கொண்டுவரப்படுகிறது?

முத்தலாக் கூட இஸ்லாத் ஏற்றுக் கொள்ளாத ஒன்று. அதற்கென்று வழிமுறைகள் இருக்கின்றன. மார்க்கம் ஏற்காத ஒன்று. இந்நிலையில் அந்தத் தவறை செய்பவரை ஒரு ஆண்டுக்கு சிறைக்கு அனுப்பும் சட்டம் இஸ்லாமியர்களை அச்சுறுத்தக் கொண்டுவரப்பட்ட சட்டம். இப்படித்தான் ஒவ்வொன்றும்.

இப்பொழுது வக்ஃப் போர்டு சீர்படுத்துகிறோம் என்று சொல்லி ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஒரு கோவிலில் நிர்வாகம் செய்யக் கூடியவர்களாக வேறு மதத்தைச் சேர்ந்தவர்களை நியமிப்பதில்லை. அவரது தாத்தா என்ன மதத்தில் இருந்தார்கள், பாட்டி என்ன மதத்தில் இருந்தார்கள், ஒன்றுவிட்ட பெரியப்பா என்ன மதத்தில் இருந்தார்கள் இந்த கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிவிட்டு தான் ஒரு கோவிலில் இருக்கக்கூடிய போர்டில் கமிட்டியில் இடம்பெற முடியும்.

### இது எந்த விதத்தில் நியாயம்?

ஆனால் இஸ்லாத் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இருக்கக்கூடிய வக்ஃப் வாரியத்தில் மற்ற மதங்களை சேர்ந்தவர்களை கொண்டு வந்து போட வேண்டும் என்று மசோதாவை நிறைவேற்றி இருக்கிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம்?

இதை யாரும் கேட்கக் கூடாது... கேட்டால் நாட்டுக்கு விரோதமாக பேசுகிறார்கள். அப்படி நீங்கள் சொன்னாலும் எங்களுக்கு கவலை இல்லை, நாங்கள் பேசுவோம்.

ஏனென்றால் நாட்டிற்கு விரோதமாக மக்களுக்கு விரோதமாக மனிதர்களுக்கு விரோதமாக செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள் நீங்கள்.

இப்போது பீகாரில் எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த எஸ் ஐ ஆரின் வழியாக... வோட் சோர் நடக்கிறது என்கிறார்கள். உங்களில் எத்தனை பேருக்கு சோர் என்றால் தெரியும்...

ஆமாம் வேறு வழியில்லை. ஒன்றிய அரசாங்கத்தின் பாதிக்கும் மேற்பட்ட திட்டத்தின் பெயர்கள் நமக்கு புரியாது. ஏனென்றால் இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் தான் பெயர் வைப்பார்கள். அந்தத் திட்டத்தின் பெயரை கடையநல்லூரிலும் அம்பாசமுத்திரத்திலும் இருக்கும் நாம் புரிந்து கொண்டு அதற்கான விண்ணப்பத்தை கொண்டு போய் கொடுக்க வேண்டும். முதலில் அது என்ன திட்டம் என்று புரிய வேண்டும் அல்லவா எனக்கே சில சமயங்களில் புரிவதில்லை. இதிலே சட்டத்திற்கு கூட இந்தியாலும் சமஸ்கிருதத்திலும் பெயர் வைக்கிறார்கள்.

தமிழ்நாடு இந்தி வேண்டாம் என்று ஏற்கனவே விட்டு விட்டோம். இப்போது கேரளாவிலும் இந்தி வேண்டாம் என்று சொல்கிறார்கள். மகாராஷ்டிராவிலும் இந்தி வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் தமிழ்நாட்டுக்கு முன்னாடியே தெரியும். ஒன்றை உள்ளே விட்டீர்கள் என்றால் அதன் பின்னாலேயே நிறைய விஷயங்கள் வரும் என்று தமிழ்நாட்டுக்கு ஏற்கனவே தெரியும். அதனால் தான் அன்றே மொழிப்போரை தொடங்கி தமிழை பாதுகாத்தோம். நமது மக்களை பாதுகாத்தோம்..

எஸ்.ஐ.ஆர். கொண்டு வருகிறோம் வாக்காளர் பட்டியலை சரி செய்கிறோம் என்று சொல்லி, பிகார் மாநிலத்திலே கிஷாந்த் கஞ்ச் என்ற மாவட்டத்திலே 68 சதவீதம் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 12% ஓட்டு காணவில்லை.

பூர்ணியா என்ற மாவட்டத்தில் 38 சதவீத இஸ்லாமியர்கள் வாழ்கிறார்கள். அங்கே 12.8 சதவீத ஓட்டுகள் காணவில்லை. கோபால் கன்ச் என்ற மாவட்டத்தில் 13 சதவீதம் தலித்துகள், 17 சதவீதம் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். அங்கே 15 சதவீதம் வாக்குகளை காணவில்லை.

மதுபானி என்ற மாவட்டத்தில் 13 சதவீதம் தலித் மக்கள் இருக்கிறார்கள், 18 சதவீதம் இஸ்லாமிய மக்கள் இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் கிட்டத்தட்ட 11% ஓட்டுக்களை காணவில்லை.

ராஜ்பூர் என்ற தனித் தொகுதியில் 69 சதவீத பெண்களின் ஓட்டுகள் காணவில்லை.

மொத்தமாக பிகாரில் மொத்தம் 55% பெண்களின் ஓட்டுகள் காணவில்லை. அவர்களுக்கு பெண்களை பார்த்தால் என்ன பயம் என்று தெரியவில்லை. பெண்கள் நன்றாக சிந்தித்து சரியாக ஓட்டு போடுவோம் என்பதால் தான் அந்த பயம். எதற்கும் மயங்கிட மாட்டோம் என்று தெரியும். அதனால பெண்கள் ஓட்டுகளை முதலில் தூக்கு என்பதுதான் அவர்கள் திட்டம்.

இப்படி ஒவ்வொரு பகுதியிலும் இஸ்லாமியர்கள் தலித்துகள் பெண்களின் ஓட்டு சதவீதம் குறைந்திருக்கிறது.

கடந்த தேர்தலில் பீகாரில் பாரதிய ஜனதா கட்சி அதன் கூட்டணி வெற்றி பெற்ற பல தொகுதிகளில் வாக்கு வித்தியாசம் 3000 மற்றும் அதற்கு குறை வாகத்தான் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழலில் 20%,, 15% ஓட்டுகள் காணவில்லை என்றால் தேர்தல் முடிவுகளை அது எந்த அளவுக்கு மாற்றி அமைக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பிகாரில் மட்டுமல்ல... இதற்கு முன்னால் நடைபெற்றுள்ள எத்தனையோ மாநில தேர்தல்களில் இதே பாணியை கையாண்டு தான் அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள். இன்றைக்கு நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்களுக்கு வந்திருக்கிற சந்தேகம், ஒன்றியத்தில் இருக்கக்கூடிய ஆட்சி மக்கள் தேர்ந்தெடுத்த ஆட்சியா அல்லது தேர்தல் ஆணையம் தேர்ந்தெடுத்த ஆட்சியா என்ற கேள்விதான்.

நாம் ஓட்டு போட்டு அவர்களை வெற்றி பெற்றார்களா அல்லது தேர்தல் ஆணையத்தை கையில் வைத்துக்கொண்டு அங்கே போய் அமர்ந்திருக்கிறார்களா என்று தெரியவில்லை.

### நினைத்த இலக்கை தொட முடியவில்லை!

அவர்கள் தொட வேண்டும் என்று நினைத்த நானூறு என்ற இலக்கை அவர்களால் தொட முடியவில்லை.

இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதை போல நம்முடைய தென்னிந்தியாவில் இருக்கக்கூடிய இரு இயக்கங்களின் உதவியோடுதான் அங்கே ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் விலகினால் அங்கே ஆட்சி இல்லை.

அப்படி இருக்கும் பொழுது இந்த நாட்டை இந்த நாட்டின் எதிர்காலத்தை தான் மட்டுமே தீர்மானிக்க வேண்டும் என்று நியாயமாக நடைபெற வேண்டிய தேர்தலை தனக்கு ஏற்ற தேர்தலாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எஸ்.ஐ.ஆர். என்பது ஸ்பெஷல் இன்டென்சிவ் ரிவிஷன் அல்ல. ஸ்பெஷல் இன்சின்சியர் ரிவிஷன்.

இவர்கள் இந்த நாட்டின் ஜனநாயகத்திற்கும் உண்மையாக இல்லை. இந்த நாட்டின் அரசியலமைப்பு சாசனத்திற்கும் உண்மையாக இல்லை. இந்த நாட்டு மக்களுக்கும் உண்மையாக இல்லை.

இந்த உண்மையற்ற அரசாங்கத்தை நாம் தூக்கி எறிவோம். இந்த நாட்டில் எந்த அதிகாரத்துக்கும் நீங்கள் வர முடியாத நிலைமையை நாங்கள் உருவாக்குவோம். அப்படி உருவாக்கி நாட்டின் ஜனநாயகத்தை காப்போம் என்ற சூளுரையை நாம் இங்கு ஏற்போம்.

இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனின் உரிமையை பாதுகாக்க கூடிய ஒரு ஆட்சியை, மொழியை பாதுகாக்கக் கூடிய ஒரு ஆட்சியை, மத சுதந்திரத்தை பாதுகாக்கக்கூடிய ஆட்சியை உருவாக்கி காட்டுவோம் காட்டுவோம் என்ற அந்த உறுதியோடு உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன் என்று உரையாற்றி முடித்தார் கனிமொழி கருணாநிதி எம்பி’.

உடன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், சட்டமன்ற உறுப்பினரும், நெல்லை மத்திய மாவட்ட கழகப் பொறுப்பாளருமான அப்துல் வஹாப், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் கே. எம்.காதர் மொகிதீன், மாநிலங்களவை உறுப்பினர் ஹாரிஸ் பீரான், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் இராமகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்

கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

## சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலக்குண்டு பேரூர்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கஸ்பா பகுதி,
வேலூர் மாவட்டம்.



நெமிலி பேரூர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



ஊஞ்சலூர் பேரூர்,
ஈரோடு தெற்கு மாவட்டம்.



பெரணமல்லூர் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.